1974 சனவரி 25]

* 162 *Q.*—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal under the consideration of the Government to provide house-sites for Harijans in Ponpadi village in Tiruttani taluk?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: பொன்பாடி கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலத்தில் அரிசனங்களுக்கு விட்டு மனை வழங்குவதற்கான குறிப்பு மாவட்ட ஆட்சியரின் பரிசிலனை யிலுள்ளது.

திரு. ஆர். பரந்தாமன்: தலைவர் அவர்களே, திருத்தணி வட்டாரத்தில் பொன்பாடி காலனியில் இருக்கிற அரிசனங் களுக்குப் பட்டா வழங்குவதற்கான செயற்குறிப்பு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அந்தக் காலனியிலிருந்து, அந்த நிலம் 1½ மைல் தூரத்தில் இருக்கிறது. ஆகவே, பக்கத்திலே இருக்கிற நிலச்சுவாந்தாருடைய நிலத்தைக் கட்டாயமாக ஆர்ஜிதம் செய்து அதைப் பெற அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: அப்படிப்பட்ட குறிப்பு எதுவும் இல்லை. ஆனால், அரசாங்கத்திடமே நிலம் இருக்கும்போது அந்த இடத்திலே அரிசன மக்கள் வந்து வாழ்வு பெறுவதுதான் நல்லதாக இருக்கும். அது இல்லாத இடத்திலே தான் வேறு இடத்தை எடுப்பதற்கு ஆலோசிக்கலாம்.

திரு. எஸ். வடிவேல்: இப்பொழுது கொடுக்கப்பட்டிருப்பது, அல்லது ஆர்ஜிதம் செய்யக்கூடிய இடம் போக்குவரத்துக்கு ரொம்ப இடைஞ்சலாக இருக்கும். ஆகவே, அவர்கள் விரும்புகிற இடத்திலே மனை வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: இது திருத்தணி வட்டத்திலுள்ள கிராமத்திலே இருப்பதாகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் இவ்வளவு தூரம் விளக்கம் தெரிந்திருப்பது குறித்து

நான் சந்தேகப்படுகிறேன். அங்குள்ள அரிசன மக்கள் அவ்விடத்திற்குப் போகமாட்டேன் என்று தெரிவிப்பார்களானல் அதன்பிறகு, அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

* 163 *Q.*—Thiru A. PARANDHAMAN : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) whether it is a fact that the allottees of house-sites in Palayanur colony in Tiruttani taluk are not able to construct houses thereon since the sub-division work has not been completed so far; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: 10-10—1972-ல் பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன. நிலத்தை உட்பிரிவு செய்து அவரவர்களுக்கு உரிய மனையின் எல்லையைக் குறித்துக் காண்பிக்கும் வேலையும் 26—6—1973-ல் முடிவடைந்து விட்டது.

திருவண்ணமலை வட்டத்தில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 164 **வினு—திரு. எம். எஸ். இராதாகிருட்டிணன்:** மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

திருவண்ணமலை வட்டம், மதுராம்பட்டு, கண்டியங்குப்பம், நரியாம்பட்டு அரிசன மக்கள் வீட்டு மனைப்பட்டாக் கோரி விடுத்துள்ள மனுவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: மதுராம்பட்டு நிலங்கள் கையகப்படுத்தப்பட்டுள்ளன. விரைவில் பட்டாக்கள் வழங்கப்படும்.

கண்டியாங்குப்பம்.—நில உரிமை பெறும் சட்டத்தின் பிரிவு 6-ன் கீழ் வடாற்காடு மாவட்ட ஆட்சியர் அனுப்பியுள்ள செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலிருக்கிறது.

நரியம்பட்டு.—நில ஆர்ஜித நடவடிக்கைகள் முடியும் நிலையில் உள்ளன.